DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 221 / 2015
Deposition of DW2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரவிக்குமார் |
| Father's / Husband Name | : | குருசாமி |
| Village | : | ஜி.உ சிலம்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.06.2026.
எதிரிகள் ஆஜர் .

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் என் மாமா உறவு முறை . அவர்கள் மீது என் அம்மா உறவுமுறை லட்சுமியம்மாள் புகார் கொடுத்தார். எதிரிகள் லட்சுமியம்மாளை அசிங்கமாக பேசி, அடித்தார்கள் , சேலையை பிடித்து இழுத்தார்கள் என்று புகார் கொடுத்தார். சாட்சி ராணி என் அக்கா ஆவார். லட்சுமியம்மாள் மகள் ஈஸ்வரியை எதிரி ராமசாமி திருமணம் செய்துள்ளார்.

2. பாண்டியம்மாள் திருப்பூரில் கம்பெனியில் வேலை பார்த்து வருகின்றார். கம்பெனி ஓனருக்கும், பாண்டியம்மாளிற்கும் தவறான தொடர்பு இருந்தது. கடந்த 13 வருடத்திற்கு முன்பு ஜி.உசிலம்பட்டிக்கு பாண்டியம்மாளும், திருப்பூர் கம்பெனி ஓனருடன் வந்து போய் கொண்டு இருந்தார். அதனால் எதிரிகள் இருவரும், பொதுமக்களுடன் சேர்ந்து பாண்டியம்மாளின் நடவடிக்கையை நல்லமாள் கோவிலில் வைத்து பேசினார்கள். ஊர் பொதுமக்கள் சொல்வதை கேட்கமுடியாது என்று

பாண்டியம்மாள் கூறிவந்தார். அதனால் பாண்டியம்மாள் நடவடிக்கை தொடர்பாக காவல் கண்காணிப்பாளர் (SP) அவரிடம் ஊர்காரர்கள் 40 பேர்கள் சென்று மனு கொடுத்தோம். அங்கு கண்டமனூர் காவல் நிலையம் செல்ல சொன்னார்கள்.கண்டமனூர் காவல் நிலையத்தில் விசாரணைக்காக ஊர் பெரியவர்கள் போயிருந்தோம். பாண்டியம்மாள் வெளியாட்களை இனிமேல் ஊருக்குள் அழைத்து வரமாட்டேன் என எழுதி கொடுத்தார். சம்பவ தேதியில் நல்லம்மாள் கோவிலில் கூட்டம் போட்டு பேசினோம். பண்டியம்மாள்,லட்சுமியம்மாள் ஆகியோர் சொல்வது போல் சம்பவத்தன்று எதுவும் நடக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பாண்டியம்மாள் , லட்சுமியம்மாள் மீது ஊர்காரர்களும், நானும் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். லட்சுமி, பாண்டியம்மாள் ஆகியோர்களுக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அ.சா.1 லட்சுமிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.29 14:40:01 +0530

Judicial Magistrate,
Andipatti.

DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 221 / 2015
Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. ராணி |
| Father's / Husband Name | : | ஈஸ்வரன் |
| Village | : | ஜி.உசிலம்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | கூலி |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.06.2026.
எதிரிகள் ஆஜர் .

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் என் அத்தை மகன்கள். அவர்கள் மீது என் பெரியம்மா லட்சுமியம்மாள் புகார் கொடுத்தார். எதிரிகள் என் பெரியம்மாளை அசிங்கமாக பேசி, அடித்தார்கள் என்று புகார் கொடுத்தார். பெரியம்மாள் மகள் ஈஸ்வரியை எதிரி ராமசாமி திருமணம் செய்துள்ளார். ஈஸ்வரியின் தகப்பனார் சின்னச்சாமி எதிரிகளுக்கு தாய்மாமன் , மருமகன் ஆவார்கள். எனது பெரியம்மாளுக்கு மூன்று பெண்கள் ஈஸ்வரி, ராணி, பாண்டியம்மாள் , ஒரு ஆண் செல்வம் ஆகியோர் குழந்தைகள்.

2. பாண்டியம்மாள் திருப்பூரில் கம்பெனியில் வேலை பார்த்து வருகின்றார். கம்பெனி ஓனருக்கும், பாண்டியம்மாளிற்கும் தவறான தொடர்பு இருந்தது. கடந்த 13 வருடத்திற்கு முன்பு ஜி.உசிலம்பட்டிக்கு பாண்டியம்மாளும், திருப்பூர் கம்பெனி ஓனருடன் வந்து போய் கொண்டு இருந்தார். அதனால் எதிரிகள் இருவரும் பாண்டியம்மாளின்

நடவடிக்கையை கண்டித்தார்கள். அதனால் பாண்டியம்மாள் நடவடிக்கை தொடர்பாக காவல் கண்காணிப்பாளர் அவரிடம் ஊர்காரர்கள் 40 பேர்கள் சென்று மனு கொடுத்தோம். அங்கு கண்டமனுார் காவல் நிலையம் செல்ல சொன்னார்கள்.கண்டமனுார் காவல் நிலையத்தில் விசாரணைக்காக பாண்டியம்மாள், லட்சுமியம்மாள், ராமர் ஆகியோர் வந்தார்கள் எங்கள் ஊர்காரர்கள் 40 பேரும் போயிருந்தோம். காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததன் அடிப்படையில் எங்கள் மீது செய்தித்தாளில் செய்தியாக காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து பிரசுரம் செய்திருந்தார்கள். **அது எ.சா.ஆ–3.**

3. எதிரிகள் மீது பாண்டியம்மாள் அவரின் அம்மா லட்சுமியம்மாள் மூலமாக பாண்டியம்மாளை எதிரிகள் கண்டிக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் புகார் கொடுத்துள்ளார். சம்பவத்தின் போது எங்களது சமூதாயத்தில் கூட்டம் போட்டோம். சம்வத்தன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை. லட்சுமியம்மாள் எதிரிகள் மீது கொடுத்த புகார் பொய் புகார் ஆகும்.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் பாண்டியம்மாள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். லட்சுமி, பாண்டியம்மாள் ஆகியோர்களுக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அ.சா.1 லட்சுமிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.29 14:40:09 +0530

Judicial Magistrate,
Andipatti.